# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 25–ஆம் நாள், செவ்வாய்கிழமை

## இ.ம.எண்.7/2025 இன் அ.வ.எண்.248/2001

## CNR No. TNSA13-000193-2001

1. மதிவாணன்
2. அருள்
3. சாந்தா . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சின்னப்பன்
2. சடையன்
3. கண்ணன் (இறந்தவர்)
4. அம்பாயிரம்
5. பொன்னுசாமி
6. R.P.ராமசாமி
7. கோவிந்தசாமி
8. சாந்தி
9. பாலதண்டாயுதன்
10. செங்கொடி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 19.11.2025ம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S.ராஜாகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவை வாதிகள் தரப்பு 1ம் சாட்சியை Recall (மீண்டும் அழைத்து) ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், இம்மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கானது சாட்சி விசாரணை முடிவடைந்து வாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து சம்மந்தமான அசல் ஆவணத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதாகவும், அந்த அசல் ஆவணம் வங்கியில் அடமானத்தில் உள்ளது என நிரூபணம் செய்ய வில்லங்க சான்றிதழையும், தாவா சொத்திற்கான கணினி பட்டாவும், வாதிகள் பெயரில் தான் நாளது வரையில் உள்ளது என்பதை நிரூபணம் செய்து வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் வாதிகள் தரப்பு 1ம் சாட்சியை (Pw1) மீண்டும் அழைக்க வேண்டியது அவசியம் என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்து மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மனுதாரர்கள்/வாதிகளால் தனித்தனியாக கிரையம் செய்யப்பட்டதாக சொல்லும் 3 கிரைய பத்திரங்களும் சட்டப்படி செல்லாது என்றும், அந்த 3 ஆவணங்களும் உண்மையான ஆவணங்கள் இல்லை என்றும், அது போலியான ஆவணங்கள் என்றும், எனவே வாதிகள் விளம்புகை பரிகாரம் கேட்க உரிமையில்லை என்றும், வழக்கானது வாதுரைக்காக

20.08.2025 முதல் 10.11.2025 வரை வாய்தாக்கள் வழங்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் சட்டப்படி சரியாக நிரூபித்துள்ளதாகவும், பிரதிவாதிகளின் வாதுரையில் கூறப்பட்ட குறைபாடுகளை நீக்கும் முயற்சியாக தவறான இந்த ஆவணங்களை குறியீடு செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், சில மாதங்களுக்கு முன்புவரை 1ம் வாதி தான் இந்த தாவாவை நடத்தி வந்ததாகவும், அவர் தான் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளதாகவும், அவர் அளித்த சாட்சியம் அவருக்கு எதிராக இருப்பதால் அவரை மீண்டும் விசாரிக்க மற்றொரு வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு செல்லத்தக்கதல்ல என்றும், வா.சா.1 மதிவாணன் கடந்த 15.07.2015ம் தேதியில் தனது முதல் நிலை சாட்சியத்தை அளித்துள்ளதாகவும், தற்பொழுது சுமார் 10 ஆண்டுகள் கழித்து அவரை மீண்டும் விசாரிக்க வேண்டும் என மற்ற வாதி மனு தாக்கல் செய்துள்ளது தவறானதும், அவசியமற்றது எனவும், இருதரப்பு வாதுரைகளும் முடிக்கப்பட்ட பின்னிட்டு மீண்டும் மறுதிறப்பு, மீண்டும் அழைப்பு, மீண்டும் ஆவணங்களை குறியீடு செய்ய மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

6. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கை நிரூபணம் செய்யும் ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றது என்றும், எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்று குறியீடு செய்ய வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணமானது தற்பொழுது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றும், எனவே அந்த ஆவணங்கள் அவசியமற்றது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது வாதிகளின் வழக்கை நிரூபிக்க அவசியமான ஆவணம் என்பதாலும், எனவே வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், பிரதிவாதிகள் அவரை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 25–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.25 18:50:36 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.25 18:50:50 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/ உத்தரவு
இ.ம.எண். 7/2025 இன்
அ.வ.எண். 248/2001
நாள் : 25.11.2025